


"எனது வாழ்க்கையே எனது செய்தி"
மகாத்மாகாந்தி

# காந்தீயம்

இருதிங்கள் இதழ்

மலர் ~ 20 இதழ் ~ 3 2005~ மார்ச் ~ 30 விலை: 10 /=

# இன்றுள்ள கல்வித் திட்டம் மாற்றப்படவேண்டும்

## எமது நாட்டுக்குத் தேவையான கல்வி போதிக்கப்பட வேண்டும்

**சோ. க. தம்பிப்பிள்ளை**

கல்வியானது தேசப்பற்றை வளர்க்க வேண்டுமென்று மகாத்தமா காந்தி கூறினார். இன்றுள்ள எமது கல்வித்திட்டம் மாற்றப்படவேண்டும். எமது நாட்டுக்குத் தேவையான கல்வி போதிக்கப்பட வேண்டும். வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்திக் கூட நல்ல பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுக்கக்கூடிய நிலை இன்று இங்கு இல்லை. மேலைத் தேச கலாசார சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு எவ்வாறு தேசப்பற்றை வளர்ப்பது? தர்மம், ஒழுக்கம் என்பன இழக்கப்பட்டு வருகின்றன. காந்தி 35 வருடகாலம் மக்கள் மத்தியில் கருத்துப் போராட்டத்தை வளர்த்த பின்னர் தான் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தார். அநீதியைக் கண்டு சமுதாயம் திரளவேண்டும். புரட்சிக்கு காந்திய கல்விதான் வழிகாட்டும்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி அடிகளின் 57 ஆவது நினைவு தினம் ஜனவரி 30 ஆம் திகதி யாழ்ப் பாணத்தில் சிறப்புற அனுஷ்டிக்கப்பட்டது. அதில் தலைமை உரையாற்றும்போதே சங்கத் தலைவர் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அன்றைய காலை நிகழ்வுகள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தியடிகளின் சிலையடியில் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாயின. அடிகளாரை நினைவுகூரும் பாடல்கள் அவ்விடத்தில் ஒலிபரப்பப்பட்டன. இவ் அஞ்சலி நிகழ்வில் சங்கத் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை, மில்க்வைற் அதிபர் இ.தவகோபால் ஆகியோர் சிலைக்கு மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து சங்க உறுப்பினர்களும் பொதுமக்களும் மலரஞ்சலி செலுத்தினர். யாழ் பல்கலைக்கழக மாணவன் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி அஞ்சலி உரைநிகழ்த்தினார்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3 மணியவில் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் அருளாசியுடன் ஆரம்ப மாயின. வழிபாடு, பிரார்த்தனையைத் தொடர்ந்து சங்கத்தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலன் அவர்கள் **காந்தியடிகளின் தத்துவார்த்த கல்வியியற் சிந்தனைகளும் பிரயோகங்களும்** எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றினார். தொடர்ந்து 'காந்தீயம்' பத்திரிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

# மனிதத் தத்துவத்தை நெறிப்படுத்த சகலருக்கும் தத்துவார்த்தக் கல்வி தேவை

**பா. தனபாலன்**

விரைவாக மாற்றம் பெற்றுவரும் உலகத்தின் செல் நெறிக்கேற்ப மனிதத்துவத்தை நெறிப்படுத்த சகலருக்கும் தத்துவார்த்தக் கல்வியியற் கண்ணோட்டம் தேவை. இதற்கான வழிகாட்டலை கீழைத்தேச தத்துவ ஞானியாக இருந்து தேச விடுதலையூடாக அகிம்சை வழியில் சாதித்துக் காட்டியவர் மகாத்மா காந்தியடிகள், இவ்வாறு தெரிவித்தார் கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா. தனபாலன்.

அகில இலங்கை காந்திசேவா சங்கம் நடத்திய மகாத்மா காந்தி தினம் அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு மேலும் பேசும்போது அவர் கூறியதாவது:-

தன்னிடத்தே பொதிந்து காணப்படும் சக்திகளை உணர்ந்து கொள்ளும்போதே தனிமனிதன் அடிமைப்படாத - இழிநிலைப்படாத - ஒருவனாக மாறலாம். இதன் வளர்ச்சியாக வாழ்வின் இறுதி உண்மையைப் பரம்பொருளை விளங்கிக்கொள்ளக் கூடிய ஒரேவழி கல்வி என்பதை அர்ப்பண சேவை மூலம் நிருபித்துக் காட்டியுள்ளார். இதைப் பாடமாக ஏற்று கல்வி அபிவிருத்தி நடைமுறைகளை விரைவாக்க ஆசிரியர்களும் கல்விச் சமூகமும் முன்வரவேண்டு.

காந்தியடிகளின் தத்துவார்த்தக் கல்விச் சிந்தனைகளை, செயற்பாடுகளைத் தெரிந்து அதன் வழிசெல்லப் பலர் ஆர்வமாகியுள்ளனர். சத்தியம். சுதந்திரம், அகிம்சை எனும் ரீதியில் கட்டப்பட்ட புனிதமான கோபுரமாக அது அமைந்துள்ளது. அவற்றைப் படிக்கும் போதும் வாழ்வில் பிரயோகிக்கும் போதும் பரிந்துணர்வும் தெளிவும் ஏற்படும். மனிதவாழ்வின் அர்த்தத்தை. தத்துவத்தைத் தெரிந்துகொள்ளமுடியும். பொதுயன ஊடகங்களும் இதற்குச் செல்வாக்குச் செலுத்தமுடியம்.

விரைவாக மாற்றமடையும் உலகச் செல்நெறிக்கேற்ப மனித தத்துவத்தை நெறிப்படுத்துகையில் சகலருக்கும் தத்துவார்த்தக் கல்வியியற் கண்ணோட்டம் தேவை. இதற்கான வழிகாட்டல்களைக் கீழைத்தேய தத்துவஞானியாக இருந்து, தேச விடுதலையினூடாக அகிம்சாவழியில் சாதித்துக் காட்டியவர் மகாத்மா காந்தியடிகள்.

அவரது கருத்துக்கமைய **மனிதனின் இறுதி நோக்கம் உண்மைக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பை உணர்ந்து கொள் வதே. இறைவன் என்பது உண்மையன்றி வேறல்ல. உடல் ரீதியாக வேறு பட்டிருப்பினும் மனிதர்கள் அனைவரும் ஒரே ஆன்மாவையே கொண் டுள்ளனர். இறைவன் என்பது அன்பு, உண்மையின் பேரொளி, உண்மை யின் மெய்ப்பொருளே. இறைவன் மனிதர்களதும் கல்வியினதும் இறுதிப் பேறாக அமையவேண்டியது மெய்ப்பொருளை விளங்கிக் கொள்வதே.**

இந்த உண்மையை அடையக் கூடிய வழி அகிம்சையே. கல்வி, அரசியல், சமூகம் போன்ற கசல நடவடிக்கையிலும் அகிம்சைவாதம் மூலம் இறைவனை விளங்கிக்கொள்வதே மனிதத்துவத்தின் நோக்கமும். முழுப்பயனுமாகும்.

## தாங்கல்✓ தாக்கல் ✕

மீண்டும் எம் காந்தி வந்தார்!
மிக மகிழ் வுற்றோம் நாங்கள்!
ஆண்டுகள் பலவாய் எங்கோ
அருந்தவம் புரிந்துயிர்த்து
ஈண்டெழுந் தருளுகின்ற
இருதிங்கள் வருகை யாரைத்
தூண்டியே தொடருவம் யாம்,
தூய நற் கடமை செய்வோம்!

மாந்தருள் மதிப்பு மிக்க
மாணிக்கம் ஆகி நின்ற
காந்தியார் நெறியை யன்றோ
'காந்தீயம்' என்றார்! அந்தக்
காந்தியைக் கூடச் சுட்டுக்
கருவறுத்திட்ட பூ மேல்
ஏந்திய கொள்கை யோடும்
எழுந்துளார் ஏசுக் காந்தி!

சத்திய சோதனைக்கும்
தளர்வடையாத காந்தி –
இத்தரை ஆட்சிக் காரர்
இனும் புரியாத காந்தி
எத்தனை கொடுமை கண்டும்
எதையுமே தாங்கும் காந்தி
உத்தமர் இன்று மீண்டும்
உதித்துளார் 'காந்தீய'த்தால்!

நல்லதே சிந்திப்பம் யாம்!
நல்லதே பேசுவம் யாம்!
நல்லதே செய்குவம் யாம்!
நல்லதல்லாத செய்யோம்!
வல்லமை **தாங்கல்** அல்லால்
வன்முறைத் **தாக்கல்** அல்ல!
நல்லவர் நாமும் - எங்கள்
நாடும் - எந் தமிழும் வாழ்க

**தாமரைத்தீவான்**
(ஈச்சந்தீவு – கிண்ணியா)


**காந்தீயம்**
இரு திங்கள் இதழ்

தனிப்பிரதி ரூபா 10/=
ஆண்டுச் சந்தா ரூபா 100/=
(தபாற்செலவு உட்பட)
முகவரி:-
**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்**
இல. 171, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.



"எனது வாழ்க்கையே எனது செய்தி"

காந்தீயம்

இருதிங்கள் இதழ்

காந்தி ஆண்டு 136 (2005 மார்ச், 30)

# கல்வி, வணிகக் கல்வி, வணிகமயமாக்கப்படும் சமுதாயம்

ஆங்கில ஆட்சிக்காலத்திலே சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்ற ஜனநாயக மந்திரங்கள் புதிய கல்வி மூலம் மக்களிடையே மெல்லப்பரப்பப்பட்டன. ஆட்சியாளரின் சமயம், நல்லொழுக்கவியல் என்பன கல்வியில் இடம்பெற்றன. 1943ம் ஆண்டு கல்வி விசேட ஆணைக்குழு அறிக்கைவரை மேனாட்டிலும் கீழ் நாட்டிலும் மதிப்புப் பெற்ற விழுமியங்கள் நமது நாட்டின் கல்வித்திட்டத்தில் இடம்பெற்றன. ஐவர் ஜெனிங்க்ஸ், சு.நடேசபிள்ளை ஹண்டிபேரின்பநாயகம், சு.சிவபாதசுந்தரம் போன்றவர்கள் அவ்வாணைக் குழுவில் இடம்பெற்று, விழுமியங்கள் புறந்தள்ளப்பட்டுவிடாமல் பார்த்துக்கொண்டனர். தாய்மொழிக்கல்வி, சமயக்கல்வி ஆகியவற்றுக்கு உரிய இடம் அளித்தனர்.

சுதந்திர இலங்கையில் மொழி வெறியும் மதவெறியும் தலைதூக்கிய 1956 ஆட்சி மாற்றங்களுக்குப் பின் நிலைமை படிப்படியாகத் தலைகீழாக மாறலாயிற்று. குடியியல், வரலாறு, புவியியல் போன்ற பாடங்கள் மூலம் சமூகவிழுமியங்கள் கற்பித்தல், பின்தள்ளப்பட்டது. 1960இல் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்ட பின், கல்வியானது அரசாங்கங்களை அமைத்த கல்வி கேள்வியற்ற அரசியல்வாதிகளின் பகடைக்காய் ஆயிற்று. அரசாங்கம் ஒரே வகையான பாடப்புத்தகங்கள் மூலம் வளரும் சமுதாயத்தின் மூளைகழுவும் பணியைத்தீவிரமாக மேற்கொண்டது. ஆசிரியர்கள் அவை அளிக்கும் கூலிக்காக மாரடித்தனர். ஆசிரிய சங்கங்கள் வெறும் தொழிற்சங்கங்களாகத் தம் வருவாயைக் கூட்டும் வழிவகைகளைப் பற்றி மட்டுமே சிந்தித்தனவே அன்றி, நாட்டின் கல்வி எங்கே போகிறது என்பதைப் பற்றிய எண்ணமே அற்றிருந்தனர். ஓரிரு சிந்தனையாளர்களும், கல்வித்திணைக்கள அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கும், இடமாற்றத்துக்கும் பயந்து வாய்மூடி, மௌனிகளாயிருந்தனர்.

கல்வி நிபுணர்கள் என்போர் முதலாம் உலகநாடுகளுக்குச் செல்வதும், அங்கு தாம் அறிந்த ஓரிரு புதுமாற்றங்களை இங்கு புகுத்துவதுமே தாம் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு தரும் பங்களிப்பாகக் கொண்டனர்.

நாட்டின் கடன்சுமை ஏறஏற, உலகவங்கி, அனைத்துலக நாணயநிதியம், உலகவர்த்தக நிறுவனம் போன்றவற்றின் செல்வாக்கு தேசிய நலன்களை அழிக்கும் அளவுக்கு இங்கு விஸ்தரிக்கப்பட்டது. உலகமயமாதல் என்ற மாயாசக்திமிக்க மந்திரத்தை உச்சரிப்பது முன்னேற்றத்தின் அறிகுறி எனக் கருதிய அதிநவீனத்துவவாதிகள் சகலதுறைகளையும் உலகவணிகத்திட்டத்திற்கு அமைய இயங்கவைத்தனர்.

"கற்க கசடுஅறக் கற்க, கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக"

"கற்றதனால் ஆயபயன் என்ன?" இறைவழிபாடு இல்லாவிட்டால் என்ற கருத்துக்கெல்லாம் பழையன என்று கழிக்கப்பட்டுவிட்டன.

கல்வியின் அடித்தளம் மாறியதும், சமய, சமூக, பொருளாதார சிந்தனைகள் எல்லாம் மாற்றமடைந்துவிட்டன. வணிகக்கல்வி நடுத்தரக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகம் வரைமுக்கிய இடம்பிடித்தது. கணித, விஞ்ஞானக் கல்விக்குப் போக ஆற்றல் குறைந்த மாணவர்கள் வணிகப்பாடங்களையே தேர்ந்தெடுத்தனர். எஞ்சியவர்களே -'சப்புச்சவர்களே'-கலைப்பாடங்கள் பயிலச் சென்றனர். தமிழ் விரிவுரையாளர் ஒருவர் 'தொல்காப்பியம் விளங்கவில்லை' என்று வகுப்பில் கேட்டமாணவருக்கு "ஆம், உங்களுக்கு விளங்காது தானே" என்றாராம், 'சப்புச்சவர்கள்' மற்றத்துறைகளுக்கு லாயக்கு அற்றவர்கள் தமிழ் படிக்கவந்தவர்கள் என்ற உதாசீனத்துடன் வணிகக்கல்வியில் உயர்பட்டம் பெற்றவர்கள் பழையகடைக்கணக்கு எழுதவும, தகுதியின்றி, நவீன வணிகநிறுவனங்களிலும் ஆங்கில அறிவுக்குறைவு காரணமாக இடம்கிடையாமல் சட்டம்பியார் வேலையே தஞ்சம் என்று போவதும், தாம் படித்தசபைக்குதவாத பாடங்களை பாடசாலை மட்டத்தில் படிப்பித்துமாகக் காலங்கழிப்பதை நாம் நேரில் காண்கிறோம்.

வணிகர் கழகங்கள் நகரந்தோறும் தோன்றுகின்றன. ஆள்வோரின் விருப்பங்களை நிறைவேற்றுகின்றன. வணிகர் பின்பற்றவேண்டிய தொழில்சார் ஒழுக்க விதிகளைக் கடைப்பிடிக்கச் செய்கின்றனவா? தொழிலை ஆதரித்து, தமக்கு தம் இலாபம் தரும் சாதாரண மக்கள் நல்லாயிருந்தால் தானே தம் பிழைப்பும் நடக்கும் என்று நினைக்கிறார்களா? அரசாங்கம் செய்யும் அக்கிரமங்களுக்கு உடந்தையாயிருந்து, பொதுமக்களின் நலனில் அணுவளவு அக்கறையும் இன்றித் தம் கூட்டத்தின் அபரிமித வருவாயை மட்டுமே கவனித்திருக்கிறார்கள்.

"கொள்வதூஉம் மிகை கொளாது,
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல் பண்டபம் பகர்ந்து வீசும்
தொல்கொண்டித்துவன்றிருக்கை"

என்று பட்டடினப்பாலை கூறும் வணிக ஒழுக்க மேம்பாடு எங்கே போய்விட்டது? வியாபாரி எதுவும் செய்யலாம் எப்படியும் வாழலாம் என்ற நிலை சர்வ சாதாரணமாகச் சமூகத்தில் நிலைபெற்றுவிட்டது. தராசுபடிகள் ஆண்டுதோறும் 'சீல்' குத்தப்படுகின்றன. ஆனால் வாங்கும் போதும்,, விற்கும் போதும் தராசு சமன் செய்து சீர்தூக்கும் கோலாக நிற்கின்றதா?

உயிரியல் மருத்துவ விஞ்ஞானிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச மகாநாடுகளை ஏற்பாடு செய்து பின்பற்ற வேண்டிய அறக்கோட்பாடுகள் ஒவ்வொரு மருத்துவமுறையிலும் எந்நிலையில் இருந்தன; இருக்கின்றன என்பதை விவாதிக்கிறார்கள், தீர்மானிக்கிறார்கள். அடுத்தமகாநாடு இவ்வாண்டு ஸ்பெயினின் பார்சலோனா நகரில் நடைபெறப்போகிறது.

வணிகர் கழகங்கள் தம் உறுப்பினர் பின்பற்ற வேண்டிய ஒழுக்கவிதிகள் பற்றிச் சிந்திக்கின்றனவா? எழுத்தாளர் அருந்ததி ரோய் கூறுகிறார், 'பல்தேசிய நிறுவனங்கள் சிறிதும் வெட்கமின்றி ஈராக்கைப் பணியவைக்கும் விடயத்தில் பலகோடி இரகசியமாகச் செலவிட்டன'. அவற்றை எம் வணிகக் கழகங்கள் பின்பற்றுகின்றனவா? சமுதாயத்தை நூற்றுக்கு நூறு வணிகமயமாக்க உதவுகின்றனவா? கல்வியாளர்கள் சகலரும் இவைபற்றி எச்சரிக்கை செய்கிறார்களா? சிந்தனையை அடகு வைத்து விட்டார்களா?. ***

# முடிவுறாத புரட்சி
## ஜயப்பிரகாஷ் நாராயணனின் அரசியல் வரலாறு

அஜித் பட்டாசார்ஜீ
(புதுடில்லி)

ஜயப் பிரகாஷ் நாராயண் (1902- 1979) காலமாகிக் கால் நூற்றாண்டு கழிந்து விட்டாலும், அவர் இன்றும் இந்தியாவுக்குப் பொருத்தமான வழிகாட்டியாய் இருக்கிறார். சுதந்திரப் போரில் தம்மோடு கூடிப் போராடியவர்கள், சுதந்திர இந்தியாவில் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தபின், புத்திளமையுடன் கூடிய அந்நாட்டின் நம்பிக்கை களில் மண் விழுத்தியதைக் கண்டு பெரும் துயருற்றார்.

பாராளுமன்ற ஜனநாயகம் எவ்வளவு கீழ் நிலையுற்று வெறும் கேலிக்கூத்தாகி விட்டது என்பதைக் கண்டு, புதுமையின் மாயைத்திரை விலக்கப்பெற்றார். அவருக்கு வேறு எந்த வழியையும் தேர்ந்து எடுக்க முடியவில்லை. சர்வோதயம் எவ்வளவுதான் உயர் இலட்சியமாய் (யுடோபியா) இருந்தாலும் ,அது மட்டுந்தான் புதிய இந்தியாவின் புதிய சமுதாய அமைப்பாக முடியும் என்ற இறுகிய தீர்மானத்தை எடுத்தார்.

அரசியல் அறநெறி பிழைத்து, மிக வேகமாகப் பாதாளம் நோக்கி வழுக்கிச் செல்வதைக் கண்டு பெரும் வேதனையுற்றார். நிகழ்ச்சிகளை அப்படியே பார்த்துக் கொண்டிருக்க அவரால் முடியவில்லை. சுதந்திரம் பெற்ற பின் இந்தியாவின் பொது அறவழியிலும் தனி மனித ஒழுக்க நிலையிலும் ஏற்பட்ட சீரழிவைப்பார்த்து கைகட்டிக் கொண்டு இருக்காமல் அதைத்தடுத்து நிறுத்தக் கங்கணம் கட்டினார். இந்தச் சவாலை அவர் எதிர் நோக்கிய விதத்தை இந்த வரலாற்று நூல் விரித்துரைக்கிறது.

### சர்வோதயம்

முதலாளித்துவ நாடான அமெரிக்க ஐக்கிய நாட்டில்தான் ஜே.பி. மார்க்ஸீயத்தின்பால் ஈர்க்கப்பட்டார். அமெரிக்க சுதந்திரப்போரின் மந்திரசக்தி இந்தியாவை பிரிட்டனிடமிருந்து விடுவிக்க ஆசைப்பட்டவரின் மனத்தைக் கவர்ந்தது. ரஷ்யாவில் ஸ்டாலினின் பயங்கர ஆட்சி சோஷலிசத்துக்குத் துரோகம் இழைத்தமையால் அவர் சோவியத் பாதையை விரும்பவில்லை இதனால் அவர் பிற்கால வாழ்வில் சாந்தம் மிக்க தலைவராகப் பழுத்தார் எனினும், கொஞ்சமும் கொள்கையை விட்டுக் கொடுக்காத புரட்சியாளராயே விளங்கினார்.

**சி.வி.கோபாலகிருஷ்ணன்**

இளமைக்காலத்தில் அரசு மட்டுமே சோஷலிசத்தை நிறுவி, வறுமையை ஒழிக்கும் என நம்பினார். ஆனால் 1975 – 76ல் இந்தியாவில் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து சர்வாதிகாரப் போக்கில் இந்திய அரசு செயற்பட்டபோது, ஜனநாயகத்தைத் தூரத்தள்ளிவிட்டு, பலாத்காரத்தையே நிறுவும் கருவியாகிவிட்டது என்பதை உணர்ந்தார்.

ஜே.பி.பொதுவுடைமைவாதிகள் விடயமாக ஏமாற்றம் அடைந்த பின், மார்க்ஸீய இலட்சியத்தை உதறித் தள்ளிவிட்டார். அது அரச அதிகாரத்துக்கு முற்றாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று வலியுறுத்தியபடியால், அதனைக் கண்டித்து, **“சோஷலிஸத்திலிருந்து சர்வோதயத்துக்கு”** என்ற நூலை, அரை நூற்றாண்டுக்கு முன் எழுதினார். சர்வோதயத்தில் இலட்சியமும் மார்க்கங்களும் ஒன்றாகின்றன; இலட்சியம் சரி என்பதற்காக தவறான மார்க்கங்களைப் பின்பற்றக்கூடாது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்தார்.

### காந்திஜியின் மாறுபாடுகள்

ஆரம்ப காலத்தில் அவர் மகாத்மா காந்தியின் வசீகரத்துக் குட்படவில்லை. கொடூர அந்நிய ஏகாதிபத்தியவல்லரசுக்கு எதிரான போராட்டத்தில் அகிம்சையைக் கைவிட முடியாது எனக் கண்டார்.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஜே.பி. பிரிட்டன் இந்தியாவில் தோற்று, அச்சு- நேசநாடுகள் இந்தியாவில் மோதும் நிலை ஏற்பட்டால், மக்கள் ஆட்சிய திகாரத்தைப் பிடிக்க ஆயத்த மாயிருக்க வேண்டும் எனப்பிரகடனம் செய்த போது, அதனைக் காந்திஜீ கடுமையான சொற்களால் கண்டித்தார்.

ஜே.பி.அதனை மறுதலித்து, காந்திஜீயை ஒரு ஆபத்தான தார்க்கிகர் (a deadly dialectitian) என்று கூறினார். எனினும் மகாத்மாகாந்தி ஒரு மாமேதை; அவர் ஒருவர் மட்டுமே அகிம்சை என்ற தந்திரோபாயத்தைக் கையாண்டு, (நல் இன மரத்தை புளி மாவில் ஒட்டுவது போல), இந்தியாவில் இருந்து ஆங்கிலேயர்களை அகற்றும் உலக வரலாறு காணாத அதிசயத்தைச் சாதித்திருக்க முடியும். என்ற பேருண்மையை நாம் மறக்கக் கூடாது. இந்நூல் இதில் நம் கவனத்தை ஈர்க்கிறது.

ஆசிரியர் (பல உண்மைகளை வெளிப்படுத்தும்) ஒரு சிறந்த ஆவணத்தில் இருந்து சான்றுகள் காட்டுகிறார்;

அது ***"பி.எம் - ஒரு நாட் குறிப்பு அவசர கால நிலைக்கு முன்னோடி"*** என்பது. இந்திரா காந்தி அவசர கால பிரகடனத்தின் பின் அரசியல் யாப்பு விதிக்கின்ற கடப்பாடுகள் அனைத்தையும் காற்றில் பறக்கவிட்டு நடந்ததையும் மகன் சஞ்ஜயகாந்தியும் அவரது சகாக்களுக்கும் யாப்புக்கு புறம்பான கிரமம் அற்ற முறைகளைக் கைகொண்டதையும் விளக்குகிறார்.

இந்த நாட்குறிப்பு **பிஷன் நாராயண் தாண்டன்** எழுதியது. அவர் பிரதம மந்திரி காரியாலயத்தில் இணைச் செயலாளராகப் பணி புரிந்த உயர் அதிகாரி. இந் நூல் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

***"இந்தியாவின் இரண்டாவது சுதந்திரம் சொல்லப்படாத கதை"*** அவசரகாலநிலை அமுலில் இருந்த காலத்தில், பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரான சண்டிகாரில் மாவட்ட நீதிபதியாய் இருந்த **எம்.ஜி. தேவசகாயம்** எழுதியது. ஜே.பி.யைச் சிறை வைத்த கதையைக் கூறுகிறது. அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள், பின் ஓய்வுபெற்று எழுதும்போது, முந்திய கட்டுப்பாடு எதுவும் இன்றி உண்மையை மறைக்கமால் எழுதும் நற்பண்பை இந்நூல் காட்டுகிறது.

ஜே.பி.சிறையில் நஞ்சூட்டப்பட்டிருக்கலாம் என்றும், அது அவருடைய மரணத்தை விரைவு படுத்தியது போலும் என்றும் சந்தேகங்கள் எழுந்ததுண்டு.

இந்திரா காந்தியின் சர்வாதிகாரம் குறித்து , ஜே.பி .பெரும் வேதனையும் செய்வது அறியாத ஏக்கமும் உற்றிருந்த வேளையில், அவர் தம்மை மறந்து அவருடைய பொறியில் அகப் பட்டுவிட்டார்; படையினரும் பொலீசாரும் அரசாங்கத்தின் கட்டளைகளுக்குத் கீழ்ப்படியத் தேவையில்லை. என்று வற்புறுத்தினார்.

இது அவருடைய ஆதரவாளர்களையும் மனவருத்தம் அடையச் செய்தது. பின்னர் அவர்தாம் வற்புறுத்தியது அரசாங்கத்தின் சட்ட விரோதமான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தேவையில்லை என்பதையே என்று விளக்கம் அளித்தார்; ஆனால் அது திருப்தியளிப்பதாயில்லை.

ஜே.பி.நக்சலைற் இயக்கம் பற்றிக் கூறியது யதார்த்ததுக்கு அமைந்திருந்தது; அது மானிய முறைக் காலத்தை ஒட்டியது என்றார். காலத்தின் போக்கை – சமூக பொருளாதார மாற்றங்களை-மனத்துட் கொள்ளாது நிலப் பிரபுக்கள் புதுமையை, புரட்சியை அடக்க முனைந்தது போல வெறிகொண்டு தாக்கியது என்றார்.

1977ல், மக்கள் இந்திரா காந்தியின் சர்வாதிகாரத்தை முறியடித்து, தேர்தலில் ஜனதா கட்சியை ஆதரித்து, அதன் மீது வைத்த நம்பிக்கைக்குத் ஜனதா துரோகம் செய்தபோது, ஜே.பி. மேலும் துயர் உற்ற கதையை மிக வேகமாக இந் நூல் கூறிச் செல்கின்றது.

ஜே.பி.தன் இறுதி நாட்களை, தான் செய்யக்கூடியது ஒன்றும் இல்லையென்ற நிலையில், துயருடன் கழித்தார். இடையிடையே சோகம் எய்தினாலும், வருங்கால சமுதாயம் நம்பிக்கையுடன் கடமையைச் செய்யும் என்று முழுதாக நம்பினார்.

இன்று இந்தியாவில் உள்ள நிலையை உற்று நோக்கினால் அவர் இயக்கிய மக்கள் புரட்சி முடிவில்லாத புரட்சியாகவே மிக நீண்ட காலத்துக்கு தொடர்ந்து இருக்கப் போகின்றது எனத் தோன்றுகின்றது.

நன்றி : "ஹிந்து", சென்னை,

## அன்பர் தபால்

(1)

"காந்தீயம்" இதழ்கிடைக்கப் பெற்றோம். அவ்விதழைப் படித்ததின் மூலம் யாழ்ப்பாணத்தில் காந்தீ சேவா சங்கத்தின் செயற்பாடுகளை திரும்பவும் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளதை அறிந்து மகிழ்வெய்துகிறோம். இன்றைய சூழலில் காந்தீய தத்துவங்கள் எந்த அளவிற்கு தேவை என்பதை தங்களில் இதழ் மூலம் அறிந்துகொண்டோம். தங்கள் முயற்சி வெற்றி பெற இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**மு. மாரியப்பன்,**
**பதிப்பாசிரியர், சர்வோதயம் மதுரை.**

(2)

"காந்தீயம்" முதல் இதழ் கிடைத்தது. மிகத் தரமான பத்திரிகையாக அமைந்திருந்தது

**சீ.யோ.சந்தியாபிள்ளை**
**மட்டக்களப்பு**

(3)

நாங்கள் நடத்திய **காந்தீயம்** தான் மக்களுக்கு நல்ல உதவிகளைச் செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தும். காந்தீய செய்முறைகளைக் கிராமங்களில் பரப்ப காந்தீய கிராம ஊழியர்களை முறையாய் பயிற்சி கொடுத்து கிராமத்தில் மாற்றங்கள் கொடுப்பது தான் சிறந்த முறை. அதுவும் மழலைகள் பயிற்சி மையங்கள் அமைத்து ஆடல் பாடலில் வளரும் சமுதாயத்தைக் காந்தீய வழியில் வழி நடத்துவது தான் பயனுள்ள சேவை மூன்று மாதத்தில் ஐந்து பாடங்களைப் போதித்து காந்தீய கிராம ஊழியரை உருவாக்கிக் கிராமங்களில் காந்தீய தத்துவங்களைப் பரப்புவது நல்ல பயன் தரும். இந்திய பள்ளிக்கூடங்களில் காந்தீயத்தை From the letter upwards என்ற பாடம் மூலம் சொல்லிக் கொடுக்கிறார்கள். எந்த மாற்றங்களையும் கல்வியாலும் பயிற்சியாலும் தான் பரப்ப முடியும். (மற்றும் அநாதை இல்லம் போன்ற ஏனையவை தனிப் பட்ட சமூக சேவைகளாய்த் தான் இருக்கும்.)

தமிழீழத்துக்கு எம்மால் செய்யக் கூடிய பணிகளைச் செய்வது எம் கடன் என்று செயறபடுவோம்.

**அ. ச. டேவிட்**
**110. சுந்தரர் வீதி,**
**திருவல்லீஸ்வரர் நகர்,**
**சென்னை – 600 040.**

# நீதியில்லாமல் உண்மைச் சமாதானம் இல்லை

அருந்ததிறோய்

அருந்ததி றோய் சக்தி வாய்ந்த எழுத்தாளர். கட்டடக்கலை நிபுணராய் பயிற்சிபெற்று உற்பத்தி வடிவமைப்பாளராய் பணி புரிந்து, இரண்டு சினிமாப்படங்களுக்கு கதை வசனம் அமைத்து பல துறை நிபுணராய் விளங்கு கிறார் அவரது முதலாவது புத்தகம், **"சின்னப் பொருட்களின் கடவுள்"** 1997ல் வெளிவந்தது. புக்கர் விருது பெற்றது! பல மொழிகளில் பெயர்த்து எழுதப்பட்டது. சென்ற ஆண்டு **சிட்னி சமாதானப் பரிசு** அவருக்கு அளிக்கப்பட்டது அப்போது அவர் ஆற்றிய உரை அவரது துணிவு அமெரிக்க உலகமயமாதலுக்கு எதிரான கடும் எதிர்ப்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது. (ஆ-ர்)

சிட்னி சமாதானப். பரிசைப் பெறுவதில் நான் மகிழ்கிறேன் அதை ஒரு எழுத்தாளருக்கு, அவரது எழுத்துக்கு, வழங்கப்பட்ட தாகவே நான் கருதுகிறேன். என்னிடம் உள்ளவை எனப்பிழையாகக் கருதப்படும் சிறப்புகள் என் மீது திணிக்கப்படுவது உண்டு. நான் ஒரு தீவிர செயல் வல்லவள் அல்லள். பெரிய சர்வசன இயக்கம் எதையும் நான் தலைமை வகித்து நடத்தவில்லை. "குரல் இல்லாதவர்களின் குரல்" என்று நிச்சயமாக என்னைக் கூறமுடியாது. குரல் இல்லாதவர்கள் என யாரும் இல்லை. வேண்டுமென்றே மௌனியாக்கப்பட்டவரும், வேண்டுமென்றே கேட்கப்படாதவர்களும்தான் இருக்கிறார்கள். நான் ஒரு எழுத்தாளி: நான் யாரையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறமுடியாது. வலிமையற்றவர்களுக்காகவும் வலிமை மிக்காரால் உரிமைகள் பறிக்கப்பட்ட வர்களுக்காவும் போராடு வோரின் பிரதிநிதியாக நான் பரிசை ஏற்கிறேன் என்று கூறுவது பொருத்தமன்று (அப்படிக் கூறுவதற்கு நான் விரும்புவேன்) ஆயினும், சிட்னி சமாதான நிலையத்தின் அரசியற் கருத்து, உலக நோக்கு, ஆகியவற்றைச் சார்ந்தவர்களாய் உலகெங்கும் உள்ள இலட்சக்கணக்கான வர்களின் ஐக்கியத்தின் வெளிப்பாடு என்ற முறையில் நான் இதனை ஏற்கலாம்.

வெளித்தோற்றத்துக்கு அமைதி போலத் தோன்றும் சமூக நிலையை எதிர்க்க எப்போதும் வியூகம் வகுக்கும் எனக்கு சமாதானப் பரிசு வழங்குதல் அங்கதச் சுவை பயப்பது ஆகாதா? நான் ஒரு பழைய மானியமுறைச் சமுதாயத்திலிருந்து வருகிறேன் என்பதை நினைவில் இருத்துக. மானியமுறைச் சமுதாயம் என்பது உள்ளத்தைக்கிளறும், மன அமைதியைக் கெடுக்கும் விடயம். நீதி இல்லாமல் உண்மைச் சமாதானம் இல்லை. எதிர்ப்பு இல்லாமல் நீதிகிடைக்க மாட்டாது.

இன்று நீதி மட்டும் தாக்குப் படவில்லை. நீதி என்ற கருத்தே துவம்சம் செய்யப்பட வேண்டும். என்போர் உளர். சமுகத்தின் நொய்மையான, உடையும் இயல்பு வாய்ந்த பகுதியினரைத் தாக்குவது முற்று முழுதாக, கொடுரமாக, கெட்டித்தனமாக நடத்தப்படுகிறது. அப்பட்டமான மிருகத்தனமாக, ஆனால் மறைமுகமாக நடைபெறுகிறது. நீதி என்பதன் வரைவிலக்கணத்தையே தேய்ந்து போகச் செய்துவிட்டது. எங்கள் பார்வைகளை கீழே இறக்கி விடுகிறோம்! எம் எதிர்பார்ப்புகளை வெட்டிக் குறுக்கிவிடுகிறோம். தன் நோக்கம் படைத்தவர்கள் கூட, நீதி என்ற விசாலமான, ஒளி மிக்க எண்ணக் கருவைக் கைவிட்டு, அதன் இடத்தில் மென்மையான, உடையும் கண்ணாடி போன்ற மனித உரிமைகள் என்பதை வைக்கி றார்கள். இது ஏக்கத்தை ஊட்டும் நிலை. சமத்துவம், சம அந்தஸ்து என்பதெல்லாம் நீதியினின்றும் மெல்ல நழுவவிடப்பட்டுவிட்டன. நீதி என்பது செல்வர்களுக்கு, மனித உரிமை என்பது ஏழைகளுக்கு என எம்மையறியாமலே நாம் சிந்திகிறோம். பரந்த கூட்டுத்தாபன உலகத்துக்குநீதி! அதனால் நசுக்கப்படுபவர்களுக்கு மனித உரிமை! அமெரிக்கருக்கு நீதி! ஆப்கானியர், ஈராக்கியருக்கு மனித உரிமை, இந்திய உயர் வகுப்பாருக்கு நீதி, தலித்துகளுக்கும் ஆதிவாசிக ளுக்கும் மனித உரிமை. நீதி வெள்ளை அவுஸ்திரேலியருக்கு; மனித உரிமை பழங் குடியனாருக்கும் புதிதாக குடியேறியவர்களுக்கும் (பல சந்தர்ப்பத்தில் அது கூட இல்லை.)

உலகின் மீது அநீதியான அரசியல், பொருளாதாரக் கட்டமைப்பை பலாத்காரமாகத் திணிக்கும் முயற்சியில் மனித உரிமைகளை அழிப்பது உள்ளார்ந்ததும், அவசியமானதுமான அம்சமாகிவிட்டது. என்பது தெளிவாகின்றது. மனித உரிமை மீறல் மிகப் பெரிய அளவில் நிகழ்ந்தால்அன்றி, புதிய – விடுதலைச் செயற் றிட்டம் வெறும் கொள்கையாகிய எல்லைகளுக்குள் உலகு கிடந்துவிடும். ஆனால் மனித உரிமை மீறல்கள் வெறும் துரதிருஷ்டமான, தற்செயலாக நிகழ்கின்ற உப விளைவு என்ற ரீதியில் சித்திரிக்கப்படுகின்றன; மற்றப்படி இந்த அரசியல், பொருளாதாரமுறை ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதே என்ற தொனியில் பேசப்படுகின்றது. இது ஒரு அற்பவிடயம் ; அரசசார்பற்ற நிறுவனங்கள் இவற்றைத் துடைத்துச் சுத்தப்படுத்தி விடலாம் என்ற மாதிரி ஒதுக்கிவிடப்படுகின்றது. இதனால்தான் காஷ்மீர், ஈராக் போன்ற உயர் பூசல் நிறைந்த பிரதேசங்களில் மனித உரிமைப் பணி யாற்றுவோர் அதிகாரத்தில் உள்ளவர்களால் சந்தேகக்கண் ணுடன் நோக்கப்படுகின்றார்கள். வறிய நாடுகளில் பல (கொடுமைத்) தடுப்பு இயக்கங்கள் மிகப்பாரிய அநீதியை எதிர்த்துப் போராடுவதுடன், "விடு

தலை", "அபிவிருத்தி" என்ற தத்துவங்களின் அடிப்படைக் கொள்கைகளையே சர்ச்சைக்குள்ளாக்குகின்றன ; மனித உரிமைகள் என்றும், ஏகாதிபத்தியத்தின் அருவருப்பான அம்சங்களை மறைத்துவிடவே அரும்பாடு படுகின்றன என்றும் கருதுகின்றன. இருக்கும் சமநிலையைப் பேணவும் அரசியல் கோபத்தை மெலிவு அடையச் செய்யவுமே உதவுகின்றன என்ற எண்ணமே பரவியுள்ளது.

(அவுஸ்திரேலியபிரதமர்ஜோன் .போவாட் சட்டவிரோத ஈராக் படையெடுப்புக்குத் துணை போனதைச் சுட்டிக் குறை கூறுகிறார் அருந்ததி)

உலக வரலாற்றில் ஈராக் படையெடுப்பு மிகப் பயந்தாங்கொள்ளிப் (அநியாயமான) போர் என எழுதப்படும். ஒரு சிறு கூட்டம் பணக்கார நாடுகள் உலகைப் பல முறை அழிக்கப் போதிய அணு ஆயுதங்களை மறைத்து வைத்தது என்ற குற்றஞ்சாட்டில், ஐ.நா.வைக் கொண்டு அதனை நிராயுதபாணி ஆக்கி, பின் அதன் மீது படையெடுத்து, அதன் மீது தம் கொடிய ஆட்சியை பதித்து, அதனை விற்பதற்கு முயற்சிக்கின்றன.

ஈராக் பற்றி எல்லாரும் பேசுகின்றனர். அதனால் பிற இடங்களில் நிகழும் மகா கொடுமைகள் இருளில் விடப்படுகின்றன. அ.்.து வருங்காலம் எப்படியிருக்கும், புதிய யுக வட்டம் ஒன்றின் ஆரம்பமே ஈராக் போர். கம்பனி போன்ற கூட்டுறவு இராணுவச் செயற்பாடு எப்படியிருக்கும் என்பதை அவதானிக்க நல்ல வாய்ப்பு அளிக்கின்றது. புதிய ஈராக்கில் கொடிய அதிகார வெறியரின் கைகள் துலாம்பரமாகத் தெரிகின்றன.

உலகின் மூல வளங்களைப் பெறச் செயகின்ற போர் இறுக்கமடைய, பொருளாதார குடியேற்றவாதம், வெளிப்படையான இராணுவத்தின் மூலம் நாடு பிடிக்கும் பழைய கொடூரம் மீண்டும் தோன்றுகிறது. ஈராக்கில் மாபெரும் கம்பனிக் கூட்டுறவு உலக மயமாதல் தர்க்க ரீதியான இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளது என்பதை நிதர்சனமாக்கிவிட்டது.

குடியேற்ற வாதமும் நவ தாராண்மை வாதமும் (சுதந்திர வர்த்தகமும்) ஒன்றிணைந்து விட்டன. இரத்தக்கறையுடைய திரைக்குப் பின்னே மறைவில் நிகழும் இரக்கமற்ற வர்த்தகத் துக்குரிய தளங்களைத் துணிநது எட்டிப்பார்த்தால், நன்கு அறியலாம். முதலில் திரைதொங்கும் மேடையை அவதானிப்போம்.

1991ல் அமெரிக்க ஜனாதிபதி பெரிய ஜோர்ஜ் புஷ் பாலைவனப் புயல் போர் நடவடிக்கையைத் தொடங்கினார். பதினாயிரக் கணக்கான ஈராக்கியர் அப்போரில் கொல்லப்பட்டனர். ஈராக்கின் வயல்கள் 300 தொன்னுக்கு மேற்பட்ட யூரேனிய குண்டுகளால் அழிவுற்றன. சிறுவருக்குப் புற்றுநோய் நான்கு மடங்காகப் பரவியது. 13 ஆண்டுகளுக்கு மேலாக 24 மில்லியன் ஈராக்கியர் போர்ப் பிரதேசத்தில் வாழ்ந்தனர். உணவு, மருந்து, நன்னீர் ஆகியவை மறுக்கப்பட்டன. அமெரிக்கா தேர்தல் என்ற பைத்திய ஆட்டத்தில் வெள்ளைமாளிகைக்கு ஜனநாயகக் கட்சிவந்தால் என்ன குடியரசு கட்சி வந்தால் என்ன ஈராக்கியருக்கு கொடுமை செய்தலில் மட்டும் மாறுபடாது. ஈராக்கின் மீது பொருளாதாரத்தடை, "அதிர்ச்சியும் ஐக்கியமும்" என்ற போர் நடவடிக்கை காரணமாக அரை மில்லியன் சிறுவர் இறந்தனர். இந்நாள் வரை அமெரிக்க போர் வீரர் எத்தனை பேர் இறந்தனர் என்பதற்கு நுட்பமான கணக்கு உண்டு. ஈராக்கியர் எத்தனை பேர் மடிந்தனர் என்பது தெரியாது. அமெரிக்க படைத்தலைவர் ரொம்மி பிராங்க்ஸ் சொன்னார் நாங்கள் பிரேதம் எண்ணும் வேலை செய்வதில்லை. (அதாவது, ஈராக்கிய பிரேதங்களை எண்ணுவதில்லை). அவர் தொடர்ந்து சொல்லியிருக்கலாம். "நாங்கள் ஜெனீவா சமாதான உடன்படிக்கையையும் மதிப்பதில்லை". என்று **"லான்செற்"** மருத்துவ சஞ்சிகை, விபரமாக கணக்கை புதிதாக மேற்கொண்டு, 2003ம் ஆண்டுப் படையெடுப்புக்குப் பின் ஒரு லட்சம் ஈராக்கியர் இறந்ததாகக் கணித்துள்ளது. (அதாவது நாம் இப்போது அமர்ந்திருக்கும் மண்டபம் போல 100 மடங்கு நிறைந்த மக்கள் - நண்பர், பெற்றோர், இளம் சிறார்கள், நண்பர், காதலர் ......... உங்களைப் போல) இன்று இங்கு அதிகம் சிறுவர் இல்லை........ நாம் ஈராக்கின் சிறுவரை மறக்கக்கூடாது. போர்த் தொழில்நுட்ப ரீதியாக, இந்த இரத்தப் பிரவாகத்தை நுட்பமான குண்டு வீச்சு என்று சொல்லியிருக்கிறார்கள். சாதாரண மொழியில் இதனைக் கசாப்புத் தொழில் என்போம்.

இது எல்லாம் இப்போது எல்லோரும் அறிந்த விடயம். ஈராக் படையெடுப்பை ஆதரிப்பவர்களும் படையெடுப்போருக்கு வாக்களிப்போரும் நமக்கு ஒன்றும் தெரியாது என்ற சாட்டு சொல்ல முடியாது. ஒன்றில் அவர்கள், பெருங் காவியங்களில் வரும். இம் மிருக வெறியாட்டம் சரியானது, நீதியானது என்று நம்பவேண்டும். அல்லது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். ஏனென்றால் அது தங்கள் நலனுக்கு உகந்தது என்ற ஒரு காரணத்துக்காக.

எனவே, 'நாகரிகமிக்க' நவீன உலகு- துன்ப உணர்வுடன் மனிதப்படுகொலை அடிமைத்தனம், குடியேற்றவாதம் என்ற பரம்பரைச் சொத்தின் மேல் கட்டப்பட்டது- உலகின் எண்ணெய் வளத்தின் பெரும் பகுதியைத் தன் கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருக்கிறது. அது மட்டுமன்றி, உலகின் மிகத் தொகையான ஆயுதங்களையும், உலகின் மிகக் கூடிய பணத் தையும், உலகின் மிகக் கூடிய வெகுஜன தொடர்புச் சாதனங் களையும் தன் கீழ்க் கொனர்ந்து விட்டது. இந்த வீண் உலகுக்கு அடித்தளமாக, கூட்டுத் தாபன முறையில் அமைந்த தொடர்புச் சாதனம் பேச்சுச் சுதந்திரம் என்ற சொற்றொடருக்குப் பதிலாக! எம் கருத்துக்குச் சம்மதமென்றால் மட்டும் பேச்சுச் சுதந்திரம் என்ற தொடரை அடிப்படையாக்கியுள்ளது.

ஐ. நா. பிரதம ஆயுதப் பரிசோதகர் ஈராக்கில் அணு ஆயுதங்கள் இல்லை என்றார். அமெரிக்க, பிரித்தானிய அரசாங்கங்கள் எடுத்துக்காட்டிய ஆதாரங்கள் அனைத்தும் பொய் என

நிருபிக்கப்பட்டு விட்டன. சதாம் ஹூசேன் நைகர் நாட்டடிலிருந்து யுரேனியம் வாங்கினார் என்றோ, பிரித்தானிய புலனாய்வுப் பிரிவு வெளியிட்ட அறிக்கை ஒரு மாண வனது ஆய்வுக் கட்டுரையிலிருந்து திருடப்பட்டது என்றோ நிருபித்த பின்பும், அமெரிக்க 'மதிப்புமிகு' பத்திரிகைகளும், தொலைக் காட்சிகளும் ஈராக்கில் அணு ஆயு தக்கிடங்குகள் இருக்கின்றன என்று இரவும் பகலும் முதற்பக்கச் செய்தி யாகப் பிரசாரம் செய்தன. இப்படி 'படைக்கப்பட்ட' சான்றுகள் எல்லா வற்றுக்கும் மூலம் சி. ஐ. ஏ (அமெ ரிக்க உளவு ஸ்தாபனம்) தான் என அறிகிறோம். கோடிக்கணக்கான டொலர் கொடுத்து வாங்கியவன் அஹமத் சலபி. (முன்னர் இந்தோ னேஷிய படைத்தலைவன் சுஹார்த்தோ, சில்லி நாட்டு பினோசே, ஈரான் மன்னர், தலிபான், சதாம் ஹூசேன்) இந்த சி.ஐ.ஏ யினால் பல கோடி பணம் கொடுக் கப்பட்டவர்கள் தானே.

ஆக, ஒரு நாடு இல்லை என்னும் அளவுக்கு குண்டு போட்டு அழிக்கப்பட்டது. ஒரு சில முணு முணுப்புக்கள், மன்னிப்புக் கேட்கும் தொனியில் கேட்கின்றன என்பது உண்மைதான். 'பாவம்' , அந்தப் பயல்கள் ; ஆனால் நாங்கள் முன் னேறிக்கொண்டு போகத்தான் வேண்டும் என்ற ரீதியில் ஈரான், சிரியா நாடுகளிலும் அணு ஆயுதங் கள் இருக்கின்றன என்று புதிய முணுமுணுப்புக்கள் கேட்கின்றன. இவற்றை எழுதுவோர் யார்? ஈராக் பற்றிய புழுகு முட்டையை அவிழ்த்த அதே 'அ' கூட்டம் தான்.

பி.பி.ஸி யின் தலைவர் பதவி துறந்தார். ஒருவர் தற்கொலை செய்தார், பிளெயர் நிர்வாகம் புலனாய்வு அறிக்கைகளைக் கலப்படம் செய்துவிட்டது என்று ஒரு பி.பி.ஸி செய்தியாளர் குற்றம் சாட்டியது தொடர்பாக. ஆனால் பிரித்தானிய அரசாங்கத் தலைவர் தம் பதவியில் ஒட்டிக்கொண்டி ருக்கிறார், அவரது அரசாங்கம் புலனாய்வு அறிக்கைகளைக் புரட் டிப் படைத்தது என வெளியான பின் பும். அந்த அரசு ஒரு நாட்டை சட்ட விரோதமாகப் பிடித்தமை, மக் களைப் பெருந்தொகையாக வதைத் தமை என்ற குற்றத்துக்கு ஆளாகி யுள்ளது.

என்னைப் போல அவுஸ் ரேலியாவுக்குள் நுழைவோர் விசா பெறும் முன் விடை பெறவேண்டிய வினா : 'போர்க்குற்றங்கள், மனித இனத்துக்கு எதிரான மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங் கள் புரிந்தீரா அல்லது, புரிவதில் பங்குகொண்டீரா? ஜேர்ஜ் புஷ், அல்லது ரோனி பிளெயர் இங்கு நுழைய விசா பெறுவார்களா? சர்வதேச சட்ட விதிகளின் படி அவர் கள் 'போர்க்குற்றவாளிகள்' என்றே கணிக்கப்பட வேண்டியவர்கள்.

எனினும், இவர்களை ஆட்சிப்பீடத்தில் இருந்து அகற்றி விட்டால், உலகம் மாறும் என நினைப்பது சிறு பிள்ளைத் தனமா னது. ஏன் என்றால், அவர்களுடைய அரசியல் எதிராளிகள் அவர்களு டைய கொள்கைகளில் உண்மை யில் பெரிய மாறுபட்ட கருத்து ஏதும் உடையவர்கள் அல்லர். அமெரிக் கத் தேர்தல் வாய் வீச்சுக்கெல் லாம், யார் திறமான சேனாதிபதி யாகலாம் என்பவை பற்றியவைக ளையே. ஜனநாயகம் என்பது வாக் காளர்களுக்கு என்பது உண்மை யான தேர்ந்தெடுக்கும் சந்தர்ப் பத்தை கொடுக்கவில்லை. சிறு எல் லைக்குட்பட்ட தேர்வையே வழங்கு கிறது.

ஈராக்கில் வெகுஜன அழி வுக்குரிய ஆயுதங்கள் கண்டுபிடிக் கப்படவில்லை; ஆனால் மயிர்க் கூச்சசெறியும் புதிய சான்றுகள் சதாம் ஹூசேன் ஒரு ஆய்த உற்பத் தித் திட்டத்தை மேற்கொள்ளக் கருதியிருந்தார் என நிருபிக் கின்றனவாம். (நான் ஒலிம்பிக் நீச்சல் போட்டியல் தங்கமெடல் வாங்கத் திட்டமிட்டால் எப்படியிருக்குமோ அப்படி.) தீமை வரும் என எதிர் பார்த்து பகைவனை அடிப்பது என்ற உபாயத்துக்கு வாழ்த்துக்கள்.! சதாம் வேறு என்ன கெட்ட எண் ணங்களை வைத்திருந்தானோ யார் அறிவர்? எல்லாம் சதாமின் சுதந்திர வீதியான வழக்கு விசாரணையில் வெளிவரும் தானே! (இங்கு எழுத் தாளரிடம் அங்கதைச் சுவை உச்ச மடைகின்றது; வாசர்களுக்கு விரசம் போல் தொனிக்கின்றது.)

முன்னாளில் சதாம் ஈராக் குர்திஷ் மக்கள், ஷியா மதப் பிரிவினர்மீது படுகொலைத் தாக்கு தல்களை நடத்தியபோது, அமெ ரிக்காவும் பிரிட்டனும் அவருக்கு, பணமும், பொருட்களும் வழங்கிய பகுதிமட்டும் விசாரணையில் வெளிவராது. சதாம் 12,000 பக் கங்களில் ஐ. நா. வுக்குச் சமர்பித்த அறிக்கை அமெரிக்காவால் திருத்தப்பட்டது. இவற்றில்; 24 அமெரிக்க கூட்டுத்தாபனங்கள் ஈராக்கில் அணுஆயுத, மரபுவழி ஆயுத உற்பத்தித் திட்டத்தில் பங்குஏற்றனர் என்ற செய்தி மறைக்கப்பட்டது என்பதும் விசார ணையில் வெளிவராது.

**(இவற்றுள் பெக்ரெல்கன், டுபோ(ன்ற்); ஈஸ்ரமன் கொடாக் லெற்ரக்காட், அனைத்துலக கணனி சிஸ்ரம்-யூனிசிஸ் நிறுவனங்களும் அடங்கும்).**

*[விமலா தக்கர் காலம் தோறும் சிறு சிறு நூல்கள் வெளியிடுகிறார். அவற்றில் அவரது கருத்துகளும் கடிதங்களும் பிறரின் அதிமிக்கமான கருத்துக்களும் சேர்க்கப்படுகின்றன* ***விழிமின், எழுமின், செயல்புரிமின்*** *என்ற நூலின் 6 – 28 பக்கங்களில் அருந்ததி ரோயின்* ***சிட்னி சமாதானப் பரிசுச்*** *சொற்பொழிவு முழுதாக வெளிவந்துள்ளது விமலாஜீ அவர்கள் தமது பல நூல்களை எமக்கு அனுப்பியுள்ளார்கள் அவர்களுக்கு நன்றி ப - ர்]*

**இப்பத்திரிகை 171இ முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க. தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக 2005ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் திகதி பரமேஸ்வராச் சந்தி, அம்பாள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதழாசிரியர். தி. உதயசூரியன்**